கூட்டம் எண்.1/2023 நாள்.30.01.2023

## <u>அவசரக்கூட்டம்</u>

குன்றத்தூர் நகராட்சியின் அவசரக்கூட்டம் 30.01.2023ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்:33553/2022/EA2-SWM-4, நாள்:10.01.2023-ன்படி தனியார் நிறுவனம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தேவையான தூய்மை பணியாளர்களை அமர்த்திடவும், இந்நகராட்சியில் நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் நாள் வாடகை அடிப்படையில் மேற்படி ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும் மீதம் தேவையான வாகனங்களை ஒப்பந்ததாரரே அமர்த்தி கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

குன்றத்தூர் நகராட்சியின் தினசரி திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு டன் ஒன்றிற்கு ரூ.4484.44 என்றும் நாளொன்றுக்கான திடக்கழிவுகள் 23.28 டன்கள் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி ஒப்பந்ததாரர் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | எண்ணிக்கை | பணியாளர்கள் எண்ணிக்கை | வாகனங்கள் எண்ணிக்கை | ஓட்டுநர்கள் எண்ணிக்கை | மேற்பார்வையாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வீடுகள் தோறும் மக்கும் குப்பை எனவும், மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து BOV வாகனத்தில் வாங்குதல் | 11642 வீடுகள் | 63 பணியாளர்கள் | 30 BOV | - | 8 மேற்பார்வையாளர்கள் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | வீடுகள் தோறும் மக்கும் குப்பை எனவும், மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து LCV வாகனத்தில் வாங்குதல் | 7762 வீடுகள் | 32 பணியாளர்கள் | 10 LCV | 10 ஓட்டுநர் | |
| 3 | வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை எனவும் மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து LCV வாகனத்தில் வாங்குதல் | 557 வணிக நிறுவனங்கள் | 4 பணியாளர்கள் | 2 LCV | 2 ஓட்டுநர் | |
| 4 | வணிக நிறுவனங்களில் மக்கும் குப்பை எனவும் மக்காத குப்பை எனவும் தரம் பிரித்து HCV வாகனத்தில் வாங்குதல் | 367 வணிக நிறுவனங்கள் | 1 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் | |
| 5 | பேருந்துகள் செல்லும் தெருக்களை தினந்தோறும் பெருக்குதல், குப்பைகள் அகற்றுதல், செயலாக்கம் செய்தல் | 38.25 கிலோ மீட்டர் | 40 பணியாளர் | 1 HCV | 1 ஓட்டுநர் | |
| 6 | தினசரி தெருக்களை பெருக்கி சுத்தம் செய்து குப்பைகளை செயலாக்கம் செய்ய வழங்குதல் | 11.36 கிலோ மீட்டர் | 6 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | இரண்டாம் நிலை குப்பைகளை பஜார் பகுதிகளில் சேகரித்து செயலாக்கம் செய்ய அனுப்பி வைத்தல் | 2 கிலோ மீட்டர் | 2 பணியாளர்கள் | 1 Compactor | 1 ஓட்டுநர் | |
| 8 | சாலையோரம் உள்ள மண் குவியல்களை அகற்றி செயலாக்கம் செய்ய அனுப்பி வைத்தல் | 3.82 கிலோ மீட்டர் | 3 பணியாளர்கள் | 1 HCV | 1 ஓட்டுநர் | |
| | மொத்தம் | | 151 | BOV - 30<br>LCV - 12<br>HCV - 4<br>Compactor -1 | 17 ஓட்டுநர் | 8 மேற்பார்வை யாளர்கள் |

மேற்படி பணிகள் மேற்கொள்ள பட்டியலில் உள்ள பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் வாகனங்கள் அமர்த்தி திடக்கழிவுகள் செயலாக்கம் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**செலவின கணக்கீட்டு விவரம் :-**

| நாளொன்றுக்கு சேகரமாகும் திடக்கழிவுகள் | டன் ஒன்றிற்கான தொகை (ரூபாயில்) | நாள் ஒன்றிற்கான மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஆண்டு ஒன்றிற்கான மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | சரக்கு மற்றும் சேவை வரி GST 18% & தொழிலாளர் நல நிதி LWF 1% (லட்சத்தில்) | ஆண்டு ஒன்றிற்கான மொத்த மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | 3 ஆண்டிற்கான மொத்த மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 23.28 | 4484.44 | 1.04 | 379.60 | 72.12 | 451.72 | 1355.16 |

மேற்படி பணிகளை மேற்கொள்ள பட்டியலில் உள்ள படி பணியாளர்கள் 151, துப்புரவு மேற்பார்வையாளர்கள் 8, ஓட்டுநர்கள் 17 மற்றும் வாகனங்கள் BOV- 30, LCV - 12 மற்றும் HCV - 4 , Compactor -1 அமர்த்தி திடக்கழிவுகள் செயலாக்கம் செய்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாக அனுமதியின்படி மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.275 நாள்.30.01.2023**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது**